## வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையே ஜூலையில் சேவை:

# 10 மெட்ரோ ரெயில்கள் தயார்

சென்னை, மார்ச்.7-

சென்னையில் சென்டிரல்-விமான நிலையம், சென்டிரல்-பரங்கிமலை, வண்ணாரப்பேட்டை-விமான நிலையம் இடையே 42 மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில் வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வரை ரூ.3 ஆயிரத்து 770 கோடி செலவில் மெட்ரோ ரெயில் பணிகள் நடைபெறுகிறது.

அந்த பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. இந்த வழித்தடத்தில் 10 மெட்ரோ ரெயில்கள் இயக்க மெட்ரோ ரெயில் நிறுவனம் முடிவு செய்தது. அந்தவகையில் இந்த 10 மெட்ரோ ரெயில்களுக்கான பெட்டிகள் ஆந்திர மாநிலம் தடா அருகில் உள்ள ஸ்ரீ சிட்டியில் பிரான்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு வந்தது.

9 பெட்டிகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பணிமனைக்கு கொண்டு வரப்பட்டது. இந்த நிலையில் 10-வது மெட்ரோ ரெயில்களுக்கான பெட்டிகள் பணிமனைக்கு கொண்டுவரப்பட்டது. வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வழித்தடத்தில் ஆய்வுகள் மேற்கொண்ட பிறகு, வருகிற ஜூலை மாதம் முதல் மெட்ரோ ரெயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.